1984 பிப்ரவரி 13]

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: தலைவர் அவர்களே, திருச்சி புத்தூர் பகுதியில் உத்தியோகத்தல் இருக்கிற அரிசனங்கள் கல்சரல் அசோசியேஷன் என்று வைத்துக்கொண்டு அதன் மூல மாக அவர்களுக்கு 5 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களிடம் நேரடியாகக் கொடுத்திருக்கிறார்கள். நானும் அந்தப் பகுதி மக்களோடு அமைச்சரிடம் அதுகுறித்துக் கேட்டுக் கொண்டேன். அமைச்சர் அவர்கள் அதுபற்றித் தகவல் கொடுக்கவில்லை. அந்த பைல் என்ன ஆனது? உததியோகத்தில் இருக்கும் அந்த அரிசனங்களுக்கு வீட்டுமனை கொடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: உத்தியோகத்தில் இருக்கக் கூடியவர்கள் என்று அவர்களே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், அரசு வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்ற உணர்வோடுதான் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே என்னை சந்தித்து சொல்லி இருந்தாலும் அரசு அதைத் தனியாக பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

ஆற்காட்டில் போபிகானா கட்டும் திட்டம்

74—

(* வினா எண் 19544—திரு. ஏ. எம். சேதுராமன்; மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காட்டில் போபிகானா கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (அ) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) உள்ளாட்சி மன்றங்களுக்கு சலவைத் துறை கட்டுவதற்கு நிதியுதவி அளிக்கும் முறையில் சில மாற்றங்களைச் செய்து அரசு ஆணை பிறப்பித்து உள்ளது. அதன் அடிப்படையில் 50 ஆயிரம் மதிப்பீட்டில் ஆற்காடு நகராட்சியில் சலவைத் துறை கட்டி செயல்படுத்த முடியுமா என்று பிற்பட்டோர் நலத்துறை இயக்குநரிடம் சில விவரங்கள் கோரப்பட்டுள்ளன. விவரங்கள் கிடைத்தவுடன் ஆணை பிறப்பிக்கப்படும்.

75—

குளித்தலை காட்டுவாரியை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

* வினா எண் 14897—திரு இரா. கருப்பையா; மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை காட்டுவாரி ஆண்டு தோறும் மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கெடுத்து விவசாயிகளுக்கு ஏற்படுத்தும் நஷ்டத்தைப் போக்க அதைச் சீர்திருத்தி அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்: (அ) மற்றும் (ஆ) இத் திட்டம் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீலனையிலுள்ளது.

திரு. இரா. கருப்பையா; தலைவர் அவர்களே, குளித்தலை காட்டுவாரியினால் ஆண்டுதோறும் மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கெடுத்து அந்தப் பகுதியிலே இருக்கிற 20—க்கு மேற்பட்ட கிராமங்களை அழித்துவிடுவதும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் சாகுபடியை சேதப்படுத்திவிடுவதும் விவசாயிகளின் விளைபொருள்கள் சேதம் அடைவதுமாக இருக்கிறது. அதோடு அந்தப் பகுதியிலே உள்ள சாலைகளும் ஒவ்வொரு ஆண்டும் பழுதடைகின்றன. ஆகவே இவைகளைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே. வெள்ளத் தடுப்புப் பணிகளில் கரைகளைப் பழுதுபார்க்கும் வேலை ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ளது. நிரந்தரமாக வெள்ளத் தடுப்புக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தோராயமாக 6 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. விவரமான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆய்வுக்குப் பிறகு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்

திரு. இரா. கருப்பையா; காட்டுவாரியினால் ஏற்படக்கூடிய சேதத்தை தவிர்க்கவேண்டுமென்று கடந்த பல ஆண்டுகளாக அரசுக்கு முறையீடுகள் அனுப்பப்பட்டு இருக்கிறது. கடந்த 1980ஆம் ஆண்டு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும் சொல்லி அங்கேயும் இந்தச் சேதத்தைத் தவிர்க்கவேண்டுமென்று கேட்டு அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டமும் இதுகுறித்து பரிந்துரை செய்திருக்கிறது. அந்த அடிப்படையில் விரைவாகச் செய்யாமல் மேலும் கால தாமதப்படுத்துவதன் மூலமாக சேதத்தை நாம் வரவழைத்துக் கொள்வதாகத்தான் அர்த்தம். அதைத் தவிர்க்கக்கூடிய முறையில் வரக்கூடிய நிதியாண்டில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு திட்டமும் உரிய ஆய்வுக்குப் பிறகுதான் மேற்கொள்ளப்படும். ஆய்வு நிலையில் இருக்கின்ற நேரத்தில் இப்பேர்ப்பட்ட உத்தரவாதங்களைத் தரமுடியாத சூழ்நிலையில் இருக்கின்றேன். என்றாலும் ஆய்வை துரிதப்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1984 பிப்ரவரி 18]

சென்னிமலை அருகே நொய்யல் ஆற்றில் அணை கட்டும் திட்டம்.

76—

*வினா எண் 170,57—திரு ப. செ. சென்னிமலைஎன்கிற கந்தசாமி மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நொய்யல் ஆற்றில் சென்னிமலை அருகே அணை கட்ட ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்; (அ) மற்றும் (ஆ) ஆம் ஓரத்துப்பாளையம் கிராமம் (சென்னிமலை) நொய்யல் ஆற்றின் குறுக்கே ஓரத்துப்பாளையம் அணைத்திட்டம் மற்றும் கரூர் வட்டம் ஆத்துப்பாளையம் பிரதான கால்வாயை 32.75 கி.மீ. முதல் 60.00 கி.மீ. முடிய நீட்டிக்கும் திட்டத்திற்கு ரூ. 877 இலட்சத்திற்கான மதிப்பீட்டினை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்கள் அனுப்பியுள்ளார். இத்திட்டத்தின் மூலம் பெரியார் மாவட்டத்தில் 500 ஏக்கர் நிலமும் திருச்சி மாவட்டத்தில் 9,875 ஏக்கர் நிலமும் பயனடையும். இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் கரூர் தாலுக்காவில் எவ்வளவு ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் தாலுக்காவைப் பொறுத்தவரையில் 13 கிராமங்கள் இந்தத் திட்டத்தினால் பயனடையும். இந்தத் திட்டத்தினால் பயனடையும் கிராமங்களின் பெயர்கள்; குப்பம், வெட்டமங்கலம், புன்னம், புஞ்சை புகளூர், திருகாட்டுத்துறை, புஞ்செய் தோட்ட குறிச்சி அட்டூர், மண்மங்கலம், காடப்பாறை புன்செய் காடரம்ப குறிச்சி, மின்னம்பள்ளி, குப்பச்சிப்பாளையம் பஞ்சமாதேவி.

திரு ச பாலகிருஷ்ணன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணையின் மூலமாக பெரியார் மாவட்டத்தில் சில பகுதிகள் பாசன வசதி பெறும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள. பெரியார் மாவட்டத்தில் எந்தெந்த பகுதிகள் இந்தத் திட்டத்தினால் பாசன வசதி பெறுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பெருந்துறை வட்டத்தில் ஓரத்துப்பாளையம், மரவப்பாளையம் ஆகிய இரண்டு பகுதிகள் பயனடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.